



# 12வது ஞானாச்சாரியார்

## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்

## அவர்களின் எழுத்துக்கள்





11வது ஞானாச்சாரியார்

12வது ஞானாச்சாரியார்

**ஆடி மாத வெளியீடு (July-August 2012)**

**பதினெண்சித்தர்கள் வகுத்தளித்த மெய்யான இந்துமத ஆண்டு 43,73,113**

### உள்ளுறைத் தலைப்புக்கள்

1. **பதினெண்சித்தர் பீடாதிபதியின் பதினெட்டு அருளாட்சி ஆணைகள் - முடிவுரை.** (இது சென்ற இதழின் தொடர்ச்சி)

***"... இன்றைக்கு இராசராசன் அனைத்து வகையான அன்னியர்களையும் அரசியலில் கண்மூடித்தனமாக அதிகாரிகளாக நியமித்து விடுவதினால்; தமிழகத்துக்குள் மேலாண்மை பெற்றுவரும் அனைத்து அன்னியர்களும் ஒன்று கூடித் 'தமிழர்களும் தங்களைப் போல் வெளியிடங்களிலிருந்து தமிழகத்துக்கு வாழவந்த அன்னியர்களே' என்ற மோசடியான நாசக் கருத்துக் கூடத் தோற்றுவிக்கப்படும். ..."***

2. **தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம் பற்றி அரசபாரம்பரியமும், குருபாரம்பரியமும் கூறுவன** - ***இன்றைய சரித்திர ஆசிரியர்களிடமும், கல்வெட்டு ஆராய்ச்சியாளர்களிடமும் இல்லாத வரலாற்றுக் குறிப்பு***

3. **அச்சிட்ட அறிக்கை வழங்கு முறை அறிவிப்பு**

4. **'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' பிறந்த வரலாறும், 'பன்னிரு திருமுறைகள்' பிறந்த வரலாறும்.**

5. **இந்துமத மறுமலர்ச்சித் திருவாணை** - ***நகராக்களின் முழக்கமே இந்துமத எழுச்சி***

6. **அரசினர்க்கு ஓர் அருளுலக அறிவிப்பு**

***- தஞ்சைப் பெரிய கோயிலில் இன்றைய அரசும், அரசியல்வாதிகளும், ஏனையோரும் நடத்தும் திருவிழாக்கள், பூசைகள் பற்றிய எச்சரிக்கை அறிவிப்பு.***

www.gurudevar.org
Email: indhuism@gmail.com
Cell: 9972130609

**தமிழ்மொழிப் பற்றும், தமிழர் நெறியான இந்துமதப் பற்றும் உள்ளவர்களுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கை. இதை நகலெடுத்துத் தமிழ் தெரிந்த அனைவருக்கும் படிக்கக் கொடுக்கவும்.**

Published on behalf of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Siddhar Arasayogi Karuvooraar.
Published by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram.
Printed by Kavin Printers, Madurai

சென்ற இதழின் தொடர்ச்சி

# பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் 18 அருளாட்சி ஆணைகள்

## முடிவுரை

1. இந்த நிறைவுரை தஞ்சைப் பெரியகோயிலைக் கட்டிய குருமகாசன்னிதானம் பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் எழுதிய குருபாரம்பரிய வாசகங்களையும்; செவிவழியாக வாழுமாறு செய்த குருவாக்கியங்களையும்; பிறர் எழுதி வைத்துக் காத்த குருவாக்கியங்களையும், வாசகங்களையும்; நாமக்கல் மோகனூர் உருத்திரம்பிள்ளை தொகுத்து வைத்த குறிப்புக்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு கண்டப்பக்கோட்டை சித்தர் ஏளனம்பட்டியார் எழுதியவைகளிலிருந்து உருவாக்கப்பட்ட ஒன்றாகும்.

2. “அருள்மொழித்தேவன் தன்னுடைய வாழ்நாளில் தானே முயன்று தோற்றுவித்து உருவாக்கி வளர்த்த ஒன்றாகவே அருட் பேரரசான சோழப் பேரரசை கருதினான். இன்னும் சொல்லப் போனால் அருள்மொழித் தேவன் தன்னை இராசராசனாக நினைத்துக் கொண்டதினால் தானே ஒரே ஒரு இரவுக்குள் தஞ்சை மாநகரை உருவாக்கியதாக நினைத்துக் கொள்கிறான். எனவேதான், தன்னிச்சையாகச் சோழப் பேரரசை ஆள முற்படுகின்றான். இம்மாபெரும் தவறை அவனே உணர்ந்து திருந்துமாறு செய்ய வேண்டும்.”

3. “இராசராச சோழன் ஒட்டக்கூத்தர்களான வடஆரியர்களுக்கு அளவுக்கு மீறிய முதன்மையும், சிறப்பும், பெருமையும் வழங்குகிறான். இதனால், இந்த அன்னியர்கள் தமிழினத்துப் பாணர், பாடுமகள், விறலியர், ஆடுமகள், கூத்தர், தொடியர், பொருநர், துடியர், கடம்பர், பறையர், மேளத்தார், வாத்தியத்தார் **[வாத்து + இயம் = வாத்தியம் -> வாத்துக் கூட்டம் ஒலி எழுப்புவது போல் சிலர் சேர்ந்து எழுப்பும் இசையொலி]** ... முதலியவர்களை யெல்லாம் அடிமைப்படுத்தி, செல்வாக்கிழக்கச் செய்து தங்களையே அனைத்துக்கும் உரிய பெரியவர்களாக நிலைநிறுத்திக் கொள்ளும் வாய்ப்பு உருவாகி விட்டது. இப்பேருண்மையினை இன்றைக்கு உணர மறுக்கின்ற, மறக்கின்ற இராசராசசோழன் காலப்போக்கில் இதை உணர்ந்தே தீருவான். ஆனால், அதற்குள் இந்த அன்னியர்கள் தங்களையும், தங்களுடைய நிலைகளையும் இவற்றிற்குரிய தங்களுடைய தாய்மொழியான சமசுக்கிருத மொழியையும் மிகமிக உயர்ந்ததாக உலகத்தார் நம்பச் செய்து விடுவார்கள். அதன்பிறகு, இந்த வடஆரியர்களின் பிடியிலிருந்து நமது சமுதாயத்தையும், சமயத்தையும் விடுவிப்பது அரிது! அரிது! அரிது! அதாவது, தனிமனிதர்களைக் கூட வடஆரிய மாயையிலிருந்து காப்பாற்றுவது மிகவும் சிரமமாகி விடும்.

எனவே, இந்த அருட்பேரரசுக்கு முன்னால் சுமார் 700 ஆண்டுகளுக்கு மேலாகச் சமய, சமுதாய, அரசியல் துறைகளில் அன்னியர்களால் அனாதைகளாகவும், நாடோடிகளாகவும், பிச்சைக் காரர்களாகவும் ஆக்கப்பட்டிருந்த இத் தமிழர்களை அவர்களுக்குரிய தத்துவபீடமான பதினெண்சித்தர் பீடமே அவர்களது வாழ்க்கையை மாற்றி அமைப்பதற்காக அருட்பேரரசான சோழப்பேரரசை அமைத்தது. இருந்தாலும், அருட்பேரரசின் அரசர்கள் காலப்போக்கில் மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று, கடமை உணர்ச்சி, பொறுப்புணர்ச்சி, தத்துவபீடத்தின் தலைமை அருளாளர்களின் வழிகாட்டல் முதலியவைகளை மறக்கவும் துறக்கவும் முயன்று அருட்பேரரசின் வீழ்ச்சிக்கு காரணமாகி விட்டார்கள். இவற்றால்தான் தமிழகத்து அரசியலும், தமிழினத்தின் சமய சமுதாயமும் பாரம்பரிய தமிழ்த் தத்துவ நாயகர்களாலேயே தலைமை தாங்கி வழிநடத்தப்பட வேண்டும் என்ற

நியதியை விதியாக்கி ஆணையாக்கினோம். இதனைப் புரிவோரில்லை, புரிந்த சிலரும் பலருக்குப் புரிவிப்பவராக இல்லை. என் செய்வது?

4. பாரம்பரியத்தை மட்டும் நம்பி அரச குடும்பத்தவர் அடுத்தடுத்து அரியணையில் அமர வாய்ப்பு அளிக்கப்பட்டது தவறாகிவிட்டது. அரச குடும்பத்தவர்களும், மற்ற அரசியல் துறை அலுவலர்களும், அதிகாரிகளும் கட்டாயமாக அன்றாடம் காயந்திரி ஓத வேண்டும், அருட்சினை மந்திரம் ஓத வேண்டும்; அன்றாடம் பூசாவிதிகளின்படி பூசை செய்ய வேண்டும்; அமாவாசை வேள்வியும், மூன்றாம்பிறைத் தொழுகையும், பருவபூசையும், வியாழக்கிழமை குருவைப் போற்றி மோனதவமும் செய்ய வேண்டும் என்ற நியதியை விதியாக்கி ஆணையாக்கிடாமல் விட்டது தவறாகிவிட்டது. அருட்பேரரசை ஆளவந்த அரசர்கள் தாங்கள் தமிழினத்தவர் என்பதையும், தங்களின் தாய்மொழி தமிழ் என்பதையும், தங்களுடைய தாய்நாடு தமிழ்நாடு என்பதையும் மறந்துவிட்டு புகழுக்காகவும், இன்பப் பொழுது போக்குக்காகவும், தமிழ்மொழியையும், தமிழ் இனத்தையும், தமிழ்நாட்டையும் அன்னியர்களின் வேட்டைப் பொருளாக ஆக்கிவிட்டார்கள். இதனால், தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு மூன்றையும் வளவளர்ச்சிப் படுத்தி மெய்யான இந்து மதத்தின் ஆட்சிமீட்சியை நிலைநிறுத்துவதற்காக உருவாக்கப்பட்ட அருட்பேரரசு மேற்படி மூன்றுமே நலிந்து மெலிந்து சிதைந்து சீரழிவுற்று நோயுற்றுக் கிடக்கும்படிச் செய்துவிட்டது. இந்த தோல்வியின் தாக்குதல்கள் எவ்வளவு காலம் நீடித்திடும் என்று சொல்லவே இயலாது.

எனவேதான், தமிழகத்தைப் பொறுத்தவரை சமய, சமுதாய, அரசியல், கல்வி, கலை இலக்கிய, தொழில், ... துறைகள் அனைத்திலும் தமிழர்களே தலைவர்களாக இருக்க வேண்டும். தமிழ்மொழியே ஆட்சி செய்ய வேண்டும் என்ற ஆணையை அரசாணையாக்க வேண்டும் என்று கட்டாயம் செய்ய நேரிட்டது. ஆனால், இராசராசனே இந்தச் சோழப்பேரரசைத் தானே தனியொருவனாகத் தன்னுடைய வாழ்நாளில் தோற்றுவித்ததாக நினைத்துத் தலைகால் தெரியாமல் ஆரம்பமும், முடிவும் பற்றி ஆராயாமல் குருபீடத்தின் ஆணைகளை மறந்தும், துறந்தும் செயல்படுகிறான். இவனுடைய இந்தத் தவறு நெடுங்காலத்திற்குத் தமிழகத்தையும், தமிழினத்தையும், தமிழ் மொழியையும் தலைதூக்கவே முடியாமல் செய்திடும்! செய்திடும்! செய்திடும்! காலப்போக்கில் அன்னியர்கள் தமிழினத்தை மலைப்பாம்பு போல் வளைத்துக் கட்டி இறுக்கி, நொறுக்கி உணவாக்கிக் கொண்டிடுவார்கள். அதன் பிறகு தமிழர்களுக்கு இடையே ஒற்றுமையோ, பற்றோ, பாசமோ, தன்னம்பிக்கையோ, தன்மானப் பிடிப்போ, விடுதலை வேட்கையோ, சுயமரியாதை நாட்டமோ, முளைத்துக் கிளைப்பது பாலைவனத்துக் குறும்புதர்களைப் போலாகி விடும். இவற்றை, அரசாங்கத்தை நடத்துபவர்கள் உணராமல் போனாலும் பாதகமில்லை; உடனடியாகத் தமிழ்நாட்டின் சமய, சமுதாய, கல்வி, கலை, இலக்கிய தொழில் துறையினர் உணர்ந்தேயாக வேண்டும்! உணர்ந்தேயாக வேண்டும்! உணர்ந்தேயாக வேண்டும்!

5. நாட்டிலுள்ள வழிபாட்டு நிலையங்கள், கருவறைகள், வெட்டவெளிக் கருவறைகள் முதலியவற்றைச் சார்ந்தே அந்தந்த வட்டாரத் தோப்புத் துறவுகள், நஞ்சைகள், புஞ்சைகள்... முதலிய அனைத்தும் நூற்றுவர் பண்ணை, இருநூற்றுவர் பண்ணை,.. என்று படிப்படியாக ஆயிரவர் பண்ணை வரை பத்துவகைப் பண்ணைகளாக்கப் பட்டன. இந்தப் பண்ணைகளின் நிறுவன நிர்வாகம் முழுக்க முழுக்க அந்தந்த வட்டாரத்து அம்பலம், அரசு, நாட்டாண்மை, பூசாறி எனும் நான்கு வகையினரின் நேரடிப் பார்வையிலேயே இருக்க வேண்டும். அப்பொழுதுதான், அரசுக்குத் தேவையான வரியும், மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களும் ஒரே சீராகக் கிடைத்திட முடியும். இதேபோல் அனைத்து வகையான வணிகமும்

சமுதாயக் குழுக்களின் கையிலேயே இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நாடுதழுவி சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடைமைக் கூட்டுறவுச் சமுதாயம் உருவாக முடியும்.

இதே அடிப்படையில்தான் விசயாலயன் முதல் சுந்தர சோழன் ஆட்சி வரை தமிழகத்தில் விரைந்து சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடைமைக் கூட்டுறவுச் சமுதாயம் உருவாகியிருந்தது. ஆனால், சுந்தர சோழனின் ஆட்சி ஆண்டு ஆரம்பத்திலிருந்தே அந்தந்த வட்டாரத்தின் ஆட்சி அந்தந்த வட்டாரத்து *கோயிலேயே அரண்மனையாகக் கொண்டு *[*கோயில் என்ற சொல் இங்கு அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களையும், கருவறைகளையும், வெட்டவெளிக் கருவறைகளையும் குறிப்பதாகப் பயன்படுத்தப் படுகிறது]* அனைத்து வகையான சமய, சமுதாய, அரசியல், கல்வி, கலை, இலக்கிய, தொழில் துறைகளும் ஆட்சி செய்யப்பட்ட நிலை தளர்வுற்றது, சிதைந்தது, கட்டுக்கோப்பு முறைகேடுற்றது. பொருளாதார ஏற்றத் தாழ்வும், சாதி உயர்வு தாழ்வுகளும் நாகத்தின் நஞ்சு போல் ஏறிவிட்டன. இப்போது உத்தமசோழனால் விளைந்த நிலையற்ற தன்மைகள் அனைத்தும் இராசராசனால் கலைகளாக்கப் பட்டுவிட்டன. மேலும், அனைத்துத் துறைகளிலும் அன்னியர்களுக்கும், அன்னிய மொழிகளுக்கும் அளவுக்கு மீறிய மதிப்பும், மரியாதையும், அதிகாரமும் வழங்கப்பட்டு விட்டன. இது எதில் கொண்டு போய் முடிக்குமோ தெரியவில்லை.

இன்றைக்கு இராசராசன் அனைத்து வகையான அன்னியர்களையும் அரசியலில் கண்மூடித்தனமாக அதிகாரிகளாக நியமித்து விடுவதினால்; ***'காலப்போக்கில் இந்த நாட்டுக்கும், தமிழர்களுக்கும் தொடர்பேயில்லை' என்ற பொய்மைக் கருத்துக் கூடத் தோன்றிவிடும்.*** இன்னும் சொல்லப் போனால் **'தமிழகத்துக்குள் மேலாண்மை பெற்றுவரும் அனைத்து அன்னியர்களும் ஒன்று கூடித் தமிழர்களும் தங்களைப் போல் வெளியிடங்களிலிருந்து தமிழகத்துக்கு வாழவந்த அன்னியர்களே' என்ற மோசடியான நாசக் கருத்துக் கூடத் தோற்றுவிக்கப்படும்**. எனவே, இம்மண்ணுலகின் முதல் இனமான தமிழர்கள் பொருளாசையின் இச்சையாலோ, அரசாங்கத்தாரிடம் உள்ள அச்சத்தாலோ, அன்னியர்களும் அன்னிய மொழிகளும் தமிழகத்தைத் தங்களின் வேட்டைக்காடாக ஆக்கிக் கொள்வதை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. அதாவது, இராசராச சோழன் தனது தவறுகளை உணர்ந்து திருந்தாவிட்டால்; இனியாவது விரைவில் திருத்தப் பட வேண்டும். அதற்குரிய செயல்திட்டமாகவும், முயற்சியாகவுமே இந்த 'பதினெண்சித்தர் பீடாதிபதியின் பதினெட்டு அருளாட்சி ஆணைகள்' உருவாக்கப் பட்டுள்ளன.

இவற்றைப் பொருளுலக வாதிகள் ஏற்றுப் போற்றிச் செயலாக்க முயலாவிட்டாலும் அருளுலக வாதிகள் மிகப் பெரிய அரிய முயற்சிகளை மேற்கொண்டு, இந்த அருளாட்சி ஆணைகளை நிறைவேற்ற முற்பட வேண்டும். இல்லாவிட்டால், தமிழர்களிலேயே பெரும்பாலானவர்கள் அன்னியர்க்கு ஆலவட்டம் சுட்டுபவர்களாகவும், கொடிபிடிப்பவர்களாகவும், பாதுகாப்பு அரண் செய்பவர்களாகவும், பாதுகை தாங்குபவர்களாகவும், அடிவருடிகளாகவும், கூலிக்காரர்களாகவும் மாறிட நேரிடும்! மாறிட நேரிடும்! மாறிட நேரிடும்!

6. இராசராச சோழனின் [வரலாற்றை] வாழ்வியல் சாதனைகளை நாடோடிப் பாடல்களாகவும், தாலாட்டுப் பாடல்களாகவும், காவடிச் சிந்துகளாகவும், வேலைநேரப் பாடல்களாகவும், பாணர் பாடலாகவும், பொருநர் முழக்கமாகவும், விறலியர் ஆட்டமாகவும், இசைவாணர்களின் இசையாகவும், நாடகவல்லாரின் நாடகமாகவும், பல்வேறு வண்ணங்களில் எங்கும் பரப்பி மிகமிக வலுவான செல்வாக்கையும், ஆதிக்கத்தையும் உருவாக்கிய யாமே இந்தத் தனிமனிதனின் முடிவுக்குக் காரணமாக நேரிட்டுவிட்டது. இவன்

எமது அருளாட்சி ஆணைகளை அரசின் ஆணைகளாக வழங்கிடத் தயங்கி, மயங்கித் தேங்கி நிற்கும் இந்த நிலை எப்படி வந்தது என்று ஆராய்ந்து உணர்ந்ததால்தான்; யாமே குருகுலத்தாரின் அனைத்து வகையான போதனைகளையும், சாதனைகளையும் நிலவறைச் சொத்துக்களாகவும், ஏட்டுச் சுரைக்காய்களாகவும் ஆக்க நேரிட்டு விட்டது. இவற்றைப் புரிந்து இனியாவது தமிழர்களுக்கே உரிய கருகுலங்களிலும், குருகுலங்களிலும், தருகுலங்களிலும், திருகுலங்களிலும் மெய்யான தமிழினப் பற்றுள்ள பெரியவர்களும், இளைஞர்களும், கல்வி கற்றிட வேண்டும்; ஏட்டறிவையும், பட்டறிவையும் முறையாக வளர்த்துக் கொள்ள வேண்டும். இந்நான்கு வகையான பயிற்சி நிலையங்களிலும் அன்னியர்கள் இடம்பெருமல் காத்திடல் வேண்டும்! காத்திடல் வேண்டும்! காத்திடல் வேண்டும்! ஏனெனில், குருகுலத்தாரின் சாதனைகளும், போதனைகளும் விதைமுதலாக வழங்கப் படுவதும், நாற்றுக்களாக வழங்கப் படுவதும் இந்த நால்வகைப் பட்ட பயிற்சி நிலையங்களில்தான்.

எனவே, குருகுலத்தார் பற்றிய அனைத்து மரபுகளும், செய்திகளும், மறைபொருளாகவே காக்கப்பட்டாக வேண்டும்! காக்கப்பட்டாக வேண்டும்! காக்கப் பட்டாக வேண்டும்! எம்மைப் பற்றிய அனைத்து வகையான செய்தி சான்றுகளையும், ஊன்றுகளையும் மறைகளாகக் காக்கும்படி ஆணையிட்டுச் செல்கிறோம் யாம். இவற்றை முறையாக வெளியிடும் பணி எமக்குப் பின் வரும் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியால் அணிபெறுக! அணிபெறுக! அணிபெறுக! எனவே, தமிழர்கள் தங்களுடைய தாய்மொழியே தங்களுக்கு விழி என்பதை உணர்ந்து செயல்படத் தவறுவார்களேயானால் அகவாழ்விலும், புறவாழ்விலும் குருடர்களாகி விடுவார்கள்; அடிமையுற்று மிடிமை யுற்றிடுவார்கள்; நலிந்து மெலிந்து கேலிக்குரியவர்களாகி விடுவார்கள்; போலியாக வாழும் கூலிகளாகி விடுவார்கள்.

*பதினெண்சித்தர் பீடாதிபதியின் அருளாட்சி ஆணைகள் என்ற ஒரு சிறு பகுதியை தஞ்சைப் பெரியகோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களுடைய வரலாறு பற்றி எழுதியுள்ள பன்னிரண்டு தொகுதிகளில் பன்னிரண்டாவது தொகுதியில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. இதனை இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் இளைஞரணி அவசர அவசியமாக அச்சிட்டு வெளியிடுகின்றது. இதன் மூலமாவது யாராவது சிலராவது, ஒருவராவது ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங் கரைக் கருவூரர் அவர்களுடைய வரலாற்று நூலும், வரலாற்றுச் சாதனை நூல்களும், போதனை நூல்களும் அச்சேறி வெளி வருவதற்கு உதவி செய்ய முன்வர மாட்டார்களா? என்று எதிர்பார்க்கின்றது. இந்த எதிர்பார்ப்பினால்தான் இந்த முடிவுரை என்ற கட்டுரையில் தமிழ்மொழி, இனம், நாடு.... முதலியவை உணர்ச்சிமிகு வளர்ச்சியும், ஆட்சிமீட்சியும் பெறுவதற்குத் தூண்டுகோலாக அமையக் கூடிய கருத்துக்களில் ஆறு மட்டும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இன்றைக்கு நாட்டில் மொழி உணர்ச்சி மட்டும் காட்டாற்று வெள்ளமாக அவ்வப்போது பெருக்கெடுத்து ஓடுகின்றது. இதனை இனப்பற்று, நாட்டுப்பற்று, சமய அறிவு, சமுதாயப் பிடிப்பு, இன ஒற்றுமை முதலியவைகளால் அணைகட்டித் தேக்கி நன்கு பயன்படுத்த வேண்டும் என்று இந்த சிறிய பகுதி தனிநூலாக வெளியிடப் படுகின்றது.*

## "பதினெண்சித்தர்களின் வரலாற்றுக் கொடை" என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்ட பகுதி.

### தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம் பற்றி அரசபாரம்பரியமும், குருபாரம்பரியமும் கூறுவன

பதினெண்சித்தர்கள் தெளிவான காலக்கணக்கீட்டு முறையில் (ஆண்டு, திங்கள், கிழமை, பொழுது, ... முதலிய குறிப்புக்கள்) உலக வரலாற்றுச் செய்திகளை 'குருபாரம்பரியம்' என்ற பெயரில் மத வரலாற்றையும் [Religious History], 'அரசபாரம்பரியம்' என்ற பெயரால் சமுதாய அரசியல் வரலாற்றையும் [The Social and Political History], 'இலக்கிய பாரம்பரியம்' என்ற பெயரால் மொழி வரலாற்றையும், இலக்கிய வரலாற்றையும் [The History of the Language and Literature] தோற்றுவித்து வளர்த்து வருகின்றனர்கள். எனவே, இவர்களை 'வரலாற்றுத் துறையின் தந்தையர்கள்' [The Fathers of the History] என்று பாராட்டுவதே உரிய செயலாகும்.

அருட்பேரரசு [The Divine Kingdom] என்று போற்றப்படும் பிற்காலச் சோழப் பேரரசை [கி.பி.785 - கி.பி.1279 வரை] தோற்றுவித்து பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் தமது முன்னோர்கள் படைத்திட்ட அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களும் வற்றாத அருள் ஊற்றுக்களாக இருந்தும் பாழ்பட்டுப் போய்விட்டன என்று வருந்தி இருபெரும் அருளூற்றுக்களைப் படைத்தார். அவற்றிற்காக பொதியமலை குகைக்குள் பன்னெடுங் காலமாக இருந்திட்ட சத்தி இலிங்கம், சிவலிங்கம் என்ற இரண்டையும் முதல் விசயாலயன் தலைமையில் கொண்டு வந்து; தஞ்சாவூரிலும், சோழபுரத்திலும் நிறுவினர். தஞ்சையில் சத்தி இலிங்கமும், சோழபுரத்தில் சிவலிங்கமும் அருளூற்றுக்களாக அமைக்கப்பட்டன.

பொதியமலையிலிருந்து இலிங்கங்களைக் கொண்டுவருவதற்காக உருவாக்கப்பட்ட சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் சிறந்த அருட்கணிப்புச் செல்வர்களாகவும், அருள்வாக்குச் செல்வர்களாகவும், அருள்வழங்கு நாயகங்களாகவும் செயல்பட்டதால் பொட்டல் வெளியில் உருவாக்கப்பட்ட தஞ்சாவூரையும், சோழபுரத்தையும் அருட்பேரரசின் இரு கண்களாக, கைகளாக மாற்றினர்கள். பிற்காலத்தில் தஞ்சாவூர் தஞ்சைப் பெருநகராகவும், சோழபுரம் கங்கைகொண்ட சோழபுரமாகவும் வளர்ந்தன. இந்த இரு அருள் ஊற்று நீர்களும் வளமூட்டி வளர்த்த பயிர்களே அருளாட்சி நாயகங்கள், அருளாட்சித் தலைவர்கள், அருளாட்சி மன்றாடிகள், அருளாட்சி மன்றத்தார்கள், அருளாட்சி முதலிகள், அருளாட்சிப் பிள்ளைகள், அருளாட்சிப் பண்டாரங்கள், ... எனப்படும் 48 வகையினர். இவர்களை முழுமையாகச் செயல்படச் செய்தவர்கள் தஞ்சையிலும், சோழபுரத்திலும் அருளூற்று மீன்களாக வாழ்ந்த அருட்பட்டாளத் தளபதிகள், அருட்சேனைத் தளபதிகள், அருட்படை வியூக நாயகங்கள் ... எனும் பதினெட்டு வகையினராவர்.

இருபெரும் அருள் ஊற்றுக்களால்தான் அடிமைத் தீ, மிடிமைத் தீ, வறுமைத் தீ, துரோகத் தீ, விரோதத் தீ, அறியாமைத் தீ, புரியாமைத் தீ, இனப்பற்றின்மைத் தீ, மொழிப்பற்றின்மைத் தீ, நாட்டுப் பற்றின்மைத் தீ, தன்மானப் பிடிப்பின்மைத் தீ, தன்னம்பிக்கையின்மைத் தீ, ... எனும் கொடிய தீக்கள் அனைத்தும் அணைக்கப் பட்டன.

**-- கருவூர்த் தேவர் தரும் குருபாரம்பரிய வாசகங்கள்**.

குறிப்பு:- தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம் பற்றி மேற்குறிப்பிட்ட செய்திகளால் அறியலாம்.

**//உண்மை நகல்//**

**மூலம்: வேம்படிதாளம் சித்தரடியான் சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல்.**

## அச்சிட்ட அறிக்கை வழங்கும் முறை அறிவிப்பு

கி.பி. 785இல் சோழப் பேரரசை [பிற்காலம்] துவக்கும் பொழுது 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் பொதிகை மலையிலிருந்து சத்திலிங்கமும் சிவலிங்கமும் யானையைக் கொண்டு இழுத்து வந்தார். அப்பொழுது வழிநெடுக மந்திரித்து பனை ஓலை நறுக்குகளில் இச்செய்திகளைக் குறிப்பிட்டு **வண்ணன், அம்பட்டையன்** இருவருக்கும் கொடுத்துக் கொண்டே வந்தார்.

**[குருபாரம்பரிய வாசகம்]**

மேலே குறிப்பிட்டது போல் நம்மவர்கள் தங்கள் தங்கள் நகரங்களிலும் கிராமங்களிலும் சுற்று வட்டாரத்திலுமுள்ள வண்ணன் [சலவைத் தொழிலாளி] கடை = 108, 243, 1008 என்றும்; அம்பட்டையன் [முடிதிருத்தும் தொழிலாளி] கடை = 108, 243, 1008 என்றும் எண்ணிக் கொண்டு வசதிபோல் கண்டிப்பாக விபூதி, குங்குமப் பொட்டலம் போட்டு அறிக்கையை நன்றாக மந்திரித்து ஒவ்வொரு கடையிலும் நேரில் சென்று கொடுத்துவிட வேண்டும். திருவாணை! குருவாணை! எச்சரிக்கை!

**வண்ணன் = காளியின் அம்சம்**
**பரியாரி = மாரியின் அம்சம்**
**கொல்லன் = பகவதி [சுடலை] அம்சம்**

மேற்குறிப்பிட்ட இருவகையினரிடம் வழங்கும்போது காளி, மாரி கட்டுப்பட்டு விடும். கொல்லன் = பகவதி, சுடலைக்குரியது என்பதால் இவர்களிடம் தரவேண்டாம். அவர்களாகக் கேட்டால் தரலாம். ஆனால், கண்டிப்பாக 108, 243, 1008 என்று இருவகையினர் கடைகளையும் எண்ணிக் கொண்டு குருதேவர் நின்ற நிலையில் புதியதாக அச்சிட்டுள்ள அறிக்கையை [4 பக்கம், 8 பக்கம்] உடன் முடிந்தால் பால்குட விழா அறிக்கையையும் சேர்த்து வழங்கவும்.

**வழங்குபவர்கள்:-**

மதுரை, வீரமாகாளி சன்னிதானம், காரைக்குடி, சேலம், வேம்படிதாளம், குலக்குடி ... முதலிய இடங்களிலுள்ள அடியான்கள். இதையே இ.ம.இ. உறுப்பினர்கள் அனைவரும் குருவாணையாக ஏற்கவும். இவ்வஞ்சலுக்கு பலநகல்கள் உடனே அவரவர் அனுப்பி வைக்கவும்.

அன்பே சிவம்!

ஓம் திருச்சிற்றம்பலம்

அன்பு / சித்தரடியார், சித்தர் மகன்,
சோ.இரவீந்திரன், 27/4/83

**//உண்மை நகல்//**

**இதன் மூலநகல்: சித்தரடியார் சோ.இரவீந்திரன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.**



*கங்கைகொண்ட சோழபுரக் கோயில் - சிவ இலிங்கத்திற்காகக் கட்டப்பட்ட கோயில்*



*தஞ்சைப் பெரிய கோயில் - சத்தி இலிங்கத்திற்காகக் கட்டப்பட்ட கோயில்*

## ‘மெய்யான இந்துமதம் காத்த கருவூர்த்தேவர் வரலாறு’ என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்ட பகுதி.

## ‘நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்’ பிறந்த வரலாறும், ‘பன்னிரு திருமுறைகள்’ பிறந்த வரலாறும்

உத்தமசோழன் நாடாள முதலாம் இராசராசசோழன் ஆட்சிப் பொறுப்புக்கள் அனைத்தையும் கவனித்துக் கொண்ட காலத்தில் தென்பாண்டி நாட்டு ஆழ்வார்த் திருநகரிலிருந்து ஆழ்வார்களின் பாடல்களை யாழ் மீட்டி இசையோடு பாடிக்கொண்டு வந்த தேவதாசிகள் சரியாக மதிக்கப்பட்டுப் பாராட்டப்படாமல் விடப்பட்டு விட்டனர். அதனால் அவர்கள் தஞ்சைப் பெரிய கோயிலில் தங்கி தங்களுடைய அருளிசைப் பணியைச் செய்ய இயலாமல் போனது.

அவர்கள் கங்கைகொண்ட சோழபுரம் சென்று தங்கி தங்களுடைய அருளிசைப் பணியைச் செய்து வந்தார்கள். அப்பொழுது காட்டுமன்னார் குடியிலிருந்த நாதமுனி அவர்கள் கங்கைகொண்ட சோழபுரம் வந்து அந்தத் தேவதாசிகளின் யாழிசையையும் இசைப்பாடல்களையும் கேட்டு மகிழ்ந்தார். இவர் பெருமுயற்சி செய்து அந்தத் தேவதாசிகளிடம் இருந்த ஓலைச்சுவடிகள் அனைத்தையும் சேகரித்தார். அவற்றின் மூலம் பன்னிரண்டு ஆழ்வார்களின் பாடல்களில் பெரும்பாலானவை கிடைத்தன. கிடைக்காதவைகளைத் தொகுக்கும் பொருட்டுத் தமிழகம் முழுவதும் இருந்த திருமால் திருப்பதிகளுக்கும், திருமால் பத்தர்களின் இல்லங்களுக்கும் சென்று முழுமையாகத் தொகுத்தார். அப்படித் தொகுத்து முடிப்பதற்கு பதினாறு (16) ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது.

அவர் தொகுத்தவைகளைத் தஞ்சப் பன்னாட்டுப் பன்னோக்குப் பல்கலைக் கழகத்திற்குக் கொண்டு வந்து பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களிடம் ஒப்படைத்தார். அப்படி அவர் பதினோராம் பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்களிடம் தமது தொகுப்பு முழுவதையும் ஒப்படைத்ததால் தஞ்சைப் பல்கலைக் கழகத்திலிருந்த பெரும்புலவர்கள் பலரும் ஒருங்குகூடிப் பெருமுயற்சிகளைச் செய்து பன்னிரண்டு ஆழ்வார்களின் பாடல்களை வகைப்படுத்தி வரிசைப்படுத்தி **‘நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமாக’** உருவாக்கினார்கள். இந்தத் தொகுதிக்கு எண்ணற்ற நகல்கள் எடுத்து பெரிய விழா கொண்டாடி நாடெங்கும் அனுப்பினார்கள். இந்த விழா தஞ்சைப் பெரியகோயிலில் முதலாம் இராசராசனின் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்தது.

குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமதத்தின் மறுமலர்ச்சிக்கு இந்த இலக்கியத் தொகுதி பேருதவி புரியும் என்று மிகவும் மகிழ்ந்தார். அதனால், அவர் நாதமுனி அவர்களின் விருப்பப்படி அவர் விரும்பிய பன்னிரண்டு ஆழ்வார்களுக்கும் செம்பினால் வார்ப்புச் சிலைகளைச் செய்து கொடுத்தார். இவையன்றி ஐம்பொன்னினால் சில சிலைகளும், சில கோயில் கருவறைகளுக்குக் கருவறை மூலவர்களின் சிலையும் தாமே கைப்படச் செதுக்கி அன்பளிப்பாகக் கொடுத்தார். இவையனைத்தும் நாதமுனி அவர்களின் பத்தியால் தமிழ்மொழிக்குக் கிடைத்திட்ட ‘நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்’ எனும் மிகப்பெரிய கலைச் செல்வத்திற்காக வழங்கப்பட்ட அன்பளிப்புக்களே யாகும்.

இந்தக் கலைச்செல்வங்களும் தோன்ற ஆரம்பித்தது அல்லது தோன்றுவதற்குக் காரணமாக இருந்த இடம் கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயில். இக் கலைச் செல்வம் முழுமை பெற்று நிறைவுற்று வெற்றி விழாக் கண்ட இடம் தஞ்சைப்பெரிய கோயில். அதாவது, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் கங்கை கொண்ட சோழபுரத்தில் ஆரம்பித்துத் தஞ்சாவூரில் நிறைவு பெற்றது, முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக்காலத்தில்.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் போலவே, தஞ்சைப் பெரிய கோயிலில் ஊர் ஊராகச் சென்று வழிபாடு செய்யும் பத்தர்கள் கூட்டத்தார் ஒருமுறை

மாலே நேரத்தில் மனமுருகித் தேவாரப் பாடல்களைத் தஞ்சைப் பெரிய கோயிலில் பாடிக் கொண்டிருந்த பொழுது அங்கு வந்திட்ட முதலாம் இராசராச சோழன் அவற்றைக் கேட்டு பெருமகிழ்வு எய்தினான். உடனே, அவன் அப்பாடல்களைப் பற்றிய விசாரணைகளைத் துவக்கினான். அதன் விளைவாகத் தேவாரப் பாடல்கள் அனைத்தையும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் போல் தொகுக்க ஆசைப்பட்டான். அம்முயற்சியில் குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் பதினெண்சித்தர்களின் குருவழி வாரிசுகளில் ஒருவராக வாழ்ந்து வரும் சிதம்பரம் வட்டாரத் திருநாரையூர் பிள்ளையார் கோயில் குருக்கள் குடும்பத்தாரை அணுகுமாறு அறிவுரை கூறினார்.

அதன்படியே முதலாம் இராசராசனும் பெருமுயற்சிகளைச் செய்து கிடைத்த மூவர்களின் தேவாரப் பாடல்களையும் திருவாசகத்தையும் தஞ்சைக்குக் கொணர்ந்தான். ஆனால், அவனுக்கு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் போல் நாட்டிலிருந்த சிவனடியார்களின் பாடல்களனைத்தையும் தொகுக்க வேண்டும் என்று ஆசை வந்தது. அதனைக் குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களிடம் தெரிவித்தான். அதற்கு அப்பணியின் துவக்க விழாவைத்தான் தங்கள் காலத்தில் செய்யமுடியும் என்றும், அப்பணியின் நிறைவு விழா எப்பொழுது நிகழும் என்று சொல்ல முடியாது என்று கூறிச் சிவனடியார்களின் பத்திப் பாடல்களைச் 'சீவநெறித் திருமுறைகள்' என்ற தலைப்பில் தொகுக்கும் பணியைத் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி அவர்களிடம் ஒப்படைத்தார்.

இப்பணி தஞ்சாவூர்ப் பெரிய கோயிலில் மிகப்பெரிய விழாவாக நிகழ்ந்தது. ஆனால், இது கி.பி. 1160இல் இரண்டாம் இராசராசன் காலத்தில்தான் நிறைவு பெற்றது. அதாவது, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் திருநிறைச் செல்வன் கருவூர்த் தேவரின் தொடர் முயற்சியால் முதலாம் இராசராசன் காலத்தில் துவக்கப்பட்ட **'சீவநெறித் திருமுறைகள்'** எனும் தொகுப்பு முதலாம் இராசேந்திரன் காலத்திலும் (கி.பி.1012-1044), முதலாம் இராசாதிராசா காலத்திலும் (கி.பி.1018-1054), இரண்டாம் இராசேந்திரன் காலத்திலும் (கி.பி.1054-1068), வீர இராசேந்திரன் காலத்திலும் (கி.பி.1063-1070), முதலாம் குலோத்துங்கன் காலத்திலும் (கி.பி.1070-1120), விக்கிரம சோழன் காலத்திலும் (கி.பி.1118-1136), இரண்டாம் குலோத்துங்கன் காலத்திலும் (கி.பி.1113-1150) வளர்ந்து இரண்டாம் இராசராசன் (கி.பி.1146-1163) காலத்தில்தான் நிறைவு பெற்றது.

அதாவது, கருவூர்த் தேவர் தமது தந்தையின் கனவையும், தமது தந்தையால் உருவாக்கப்பட்ட பேரரசனான முதலாம் இராசராசனின் கனவையும் நிறைவேற்றுவதற்காக நூற்றாண்டுகளுக்கு மேலாக உழைத்து கி.பி. 1160இல் கங்கைகொண்ட சோழபுரக் கோயிலில் 'பன்னிரு திருமுறைகள்' என்ற தலைப்பில் சீவநெறித் திருமுறைகள் அனைத்தையும் தொகுத்து நிறைவு செய்தார். அதாவது, தஞ்சைப் பெரிய கோயிலில் துவங்கிய தொகுப்புப் பணி கங்கைகொண்ட சோழபுரக் கோயிலில் நிறைவு பெற்றது இங்கு நினைவு கூரத் தக்கது. திருமாலின் பெருமை கூறும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் கங்கைகொண்ட சோழபுரக் கோயிலில் உள்ள சிவலிங்கச் சன்னிதியில் துவங்கி தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள சத்திலிங்க சன்னிதியில் நிறைவு பெற்றது என்பதும்; சிவனின் பெருமை கூறும் 'பன்னிரு திருமுறைகள்' தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள சத்திலிங்கச் சன்னதியில் துவங்கி, கங்கை கொண்ட சோழபுரக் கோயிலில் உள்ள சிவலிங்கச் சன்னதியில் நிறைவு பெற்றது என்பதேயாகும்.

ஏனெனில், மெய்யான இந்துமத மறுமலர்ச்சிக்காகத் தான் தஞ்சையில் உள்ள சத்திலிங்கக் கோயிலும், கங்கைகொண்ட சோழபுரத்திலுள்ள சிவலிங்கக் கோயிலும் பொதிகைமலே நிலவறையிலிருந்து வெளிப்பட்ட பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களால் கட்டப்பட்டன. அதாவது, இந்த இரண்டு

கோயில்களையே மெய்யான இந்துமத மறுமலர்ச்சிப் பணிக்குரிய கைகளாகவும், கண்களாகவும் படைத்தார் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர். இவற்றின் மூலமே என்றென்றும் மெய்யான இந்துமதத்திற்குக் கைகளாகவும் கண்களாகவும் விளங்கிடக் கூடிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும், பன்னிரு திருமுறையும் உருவாயின. இவற்றில் இராமானுஞ்சாச்சாரியாரால் வைணவ மதம் என்றோர் பிரிவு ஏற்படுவதற்கு முன்பே உருவான ஒன்றே நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்.

எனவே, மெய்யான இந்துமதத்தில் வைணவ மதத்திற்காக நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும், சைவ மதத்திற்காகப் பன்னிரு திருமுறைகளும் என்று **இரண்டு தனிப்பிரிவுகளாக இலக்கியங்கள் உருவானதாக யாரும் எண்ணத் தேவையில்லை**. அப்படியே எண்ணினாலும், பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிக்குப் பிறகுதான் சைவத்திலிருந்து வைணவம் என்றோர் பிரிவு உண்டாயிற்று என்பது குறிப்பிடத் தக்கது. அதாவது, காஞ்சிபுரத்தைச் சேர்ந்த வீரசைவ மரபிற்குரிய இராமானுஞ்ச முதலியார் உருவாக்கிய திருமாலின் பத்தி நெறித் தத்துவம்தான் வைணவ சமயம் என்று தனியாகப் பிரிந்ததே தவிர மெய்யான இந்துமதத்தில் அப்படிப்பட்ட பிரிவு இல்லை.

எனவேதான், இன்றைக்கு பதினோராம் பதினெண்சித்தர் பீடாதிபதியைப் போல் சத்தி இலிங்கக் கோயிலையும், சிவ இலிங்கக் கோயிலையும் மட்டும் புதிதாக உருவாக்காமல் ஏற்கனவே உள்ள அனைத்து வகையான கோயில்களையும் புத்துயிர்ப்புச் செய்து பயன்படுத்திக் கொள்ளும் திட்டமும், கருகுலம் குருகுலம் தருகுலம் திருகுலம் என்று நான்கு வகையான அருளுலக விதைப் பண்ணைகளையும், நாற்றுப் பண்ணைகளையும் உருவாக்கும் திட்டமும் செயலாக்கப்படுகின்றன பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்களால்.

**//உண்மை நகல்//**

**மூலநகல்: வேம்படிதாளம் சித்தரடியான் சீ.மணி அவர்களின் கையெழுத்தில் கிடைத்த நகல்**

# இந்துமத மறுமலர்ச்சித் திருவாணை

இந்த உலகம் நூறு கோடியாண்டுகள் நெருப்புக் கோளமாகவும்; நூறு கோடி-யாண்டுகள் பனிக்கட்டிக் கோளமாகவும்; நூறு கோடியாண்டுகள் நீர்க் கோளமாகவும்; நூறு கோடியாண்டுகள் கல்லும் மண்ணும் தோன்றிய காலமாகவும் கழிந்த பின்னரே நூறு கோடியாண்டுகளில் படிப்படியாகப் பயிரினங்களும், உயிரினங்களும் தோன்றின. இவை ஒலி அலைகளாலும் [Sound Waves], ஒளிக் கற்றைகளாலும் [Light Rays] உருவாக்கப் பட்டவையேயாகும். எனவேதான், இந்த உலகம் தோன்றுவதற்கு முன்பே அதாவது ஐநூறு கோடியாண்டுகளுக்கு முன்பே அண்டப் பெருவெளி அனைத்தும் செயல்பட்டுக் கொண்டு வரும் பதினெண்சித்தர்கள் ஒலியையும், ஒளியையும் வழிபடுவதன் மூலம் ஆக்கல், அழித்தல், காத்தல், அருளல், இரங்கல் எனும் ஐந்தொழிலைச் செய்யும் சித்தர்நெறி எனும் இந்து மதத்தைக் கண்டார்கள். அவர்களுடைய கருத்துக்கள் அனைத்தையும் தாய்மொழியான தமிழ்மொழியிலேயே வெளியிட்டார்கள்; செயலாக்குவதற்குரிய வழிவகைகளைச் செய்தார்கள். தமிழ் எழுத்துக்கள் அனைத்தும் ஒளி வடிவையும், ஒலிப் பிறப்பையும் [The form of or structure of Light Rays and the birth of Sound Waves are the fundamentals of Tamil alphabets] அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப் பட்டவை.

எனவேதான், தமிழ்மொழிக்கு இறை அணுக்களை ஈர்க்கவும்; ஒன்று திரட்டவும்; ஒற்றுமைப் படுத்தவும்; ஆணையிட்டுச் செயல்படுத்தவும் பேராற்றல் இருக்கின்றது.

அதனால்தான், "தமிழ்மொழியே கடவுள்", "தமிழ்மொழியைப் பேசுவதே இறை வழிபாடு", "தமிழர் நினைவே மறை", "தமிழர் வாழ்வே முறை", "தமிழே அமிழ்து", "தமிழே இனிமை, இளமை, கனிவு, சுவை, நிலைபேறு, தவம், சித்தி", ... என்றெல்லாம் பதினெண்சித்தர்களின் நூல்களில் பாராட்டப் படுகின்றது.

இம் மண்ணுலகில் முதன்முதல் உயிரினம் தோன்றிய இடமே இளமுறியாக் கண்டம் எனப்படும் குமரிக்கண்டம். இங்கு தோன்றிய முதலினத்தைத்தான் தமிழினமாக மாற்றினார்கள் பதினெண்சித்தர்கள். இதற்குப் பிறகு உலகின் பல்வேறு பகுதிகளில் மனித இனங்கள் தோன்றின. அந்த இனங்களுக்கெல்லாம் தமிழினத்தின் மூலம் அனைத்து வகையான பண்பாடுகளையும் நாகரீகங்களையும் வழங்கினார்கள் பதினெண்சித்தர்கள். இந்துமதம் என்ற அழகிய பொருளாழமிக்க தமிழ்ச் சொல்லின் மூலமே தங்களுடைய சித்தர்நெறி எனும் "உயிர் மதத்"தை [சீவ மதம் = சிவ மதம் => சைவ மதம்] உலகுக்கு வழங்கினார்கள். எனவேதான், இந்த உலகில் தோன்றிய அனைத்து மதங்களிலும் வழிபாட்டில் நெருப்பு அல்லது விளக்கொளி முதன்மை பெறுவதோடு; பல்வேறு வகையான ஒலிக்குரிய இசைக் கருவிகளும் இடம் பெறுகின்றன. அதாவது, ஒலியும் ஒளியுமே பயிரினங்களையும் உயிரினங்களையும் ஒன்றாக்கி உய்வித்து உயர்வடையச் செய்கின்றன என்ற சித்தர் நெறித் தத்துவமே ஒளி வழிபாடாகவும் *[Worship of Light Rays = அருட்பெருஞ்சோதி = குத்து விளக்குப் பூசை = மனை விளக்குப் பூசை = கார்த்திகை விளக்கு பூசை = மாலையில் மாட விளக்குப் பூசை = திருநாள்களில் கோபுர விளக்குப் பூசை.....]*, ஒலி வழிபாடாகவும் *[Worship of Sounds, இசைக் கருவிகளின் மூலம் வழிபடல்; வாய்ப்பாட்டின் மூலம் வழிபடல்; உரத்த குரலில் அழுது, புலம்பி, அரற்றி, வேண்டுகோள்களை வெளியிட்டுக் கும்பிட்டுப் பூசை செய்தல்; அருள் வாசகங்களைச் சொல்லித் தொழுகை செய்தல்; மந்திறங்களைச் சொல்லிப் பூசைகள் செய்தல்...]* எல்லா மதங்களுக்கும் கண்களாயின. இந்து மதத்தில் ஒவ்வொரு கோயில்களிலும் நகரா அல்லது முரசு அல்லது பறை அல்லது கிடுமுட்டி அல்லது கிண்ணரம்... எனப்படும் பேரொலி எழுப்பக் கூடிய தோல் கருவிகளைப் பயன்படுத்தி பேரொலி எழுப்பியே பூசையைச் செய்கின்ற முறை இருந்தது. கி.மு.100 முதல் கி.பி.150வரை இருந்த பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் அமராவதி ஆற்றங்கரைக் கருவூறார் அவர்கள் "அருள் அணு ஊற்றுக்களையே கருவறைகள் ஆக்கிப் பதினெண்சித்தர்கள் 48 வகையான வழிபாட்டு நிலையங்களைக் கட்டியிருக்கிறார்கள். இவற்றில் ஆறுகாலமும் அழுகை முறை, தொழுகை முறை, எள்ளல் முறை, ஏசல் முறை, வேண்டல் முறை, பாடுகிடத்தல் முறை என்று ஆறு வகையான வழிபாடுகளும் நகராக்களின் பேரொலியை எழுப்பி அந்தப் பேரொலியோடு நிறைவு பெறுகின்றன என்பதால்; கோயில் கருவறைகளில் உள்ள சத்திகள் வேறெங்கும் நகராமல் பாதுகாக்கப் படுகின்றன. நாடாளுபவர்கள் புதிய புதிய நகராக்களைத் தேவையான குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே செய்து இந்த வழிபாட்டு நிலையங்களுக்கு வழங்கி நகராக்களின் பேரொலி நின்று விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் பொருளாட்சி இருளாட்சி ஆகிவிடாமல் என்றென்றும் ஒளி மிகுந்திடும் அருளாட்சி ஆகிடும். நகரா ஒலி கருவறை மூலவர்களை வருவோர் அனைவருக்கும் அருளை வழங்கச் செய்யும். எனவே, நகரா ஒலிக்குப் பிறகே வழிபாட்டு நிலையங்களின் முதல் வாசல் கதவைத் திறக்க வேண்டும். இதற்காகத்தான் ஒவ்வொரு வழிபாட்டு நிலையத்தின் நுழைவு

வாயிலின் மேல்தள மண்டபத்தில் **நகரா மண்டபம்** அமைப்பது ஆகமத்தில் வலியுறுத்தப் படுகிறது... என்று குறிப்பதைப் பிற்காலச் சோழப் பேரரசர்கள் புரிந்து செயல்படாததால் தான் அவர்கள் கட்டிய ஆயிரக் கணக்கான கோயில்களும் அருளற்றுப் போயின....” - குருபாரம்பரிய வாசகம். பதிேனாராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் மகன் கருவூர்த் தேவர் [கி.பி. 1002 முதல் 1182 முடிய] அவர்கள் கடைசிக் காலத்தில் மனமுடைந்து எழுதிய வாசகங்கள் இவை.

எனவே இந்துமதம் மறுமலர்ச்சி அடைய வேண்டுமென்றால் உடனடியாக எல்லாக் கோயில்களிலும் மணியடிப்பதற்கு மணிமண்டபம் உயரத்தில் கட்டி யிருப்பது போல்; நகரா மண்டபம் கோயில் முன் மண்டப மேல்தளத்தில் கட்டப்பட்டாக வேண்டும். சிறிய கோயில்களில் பூசைக்கு முன்னும் பின்னும் வாசலில் கொண்டு வந்து முழக்க நகராக்கள் செய்து வைக்க வேண்டும். கோயில் விழாக்களில் நகராக்கள் முன்னும் பின்னும் வர வேண்டும். எல்லா வழிபாட்டு நிலையங்களிலும் அன்றாடம் ஆறுகாலமும் நகராக்கள் முழங்கி தொழுகை முறையில் வழிபாடுகள் நிகழ வேண்டும். இன்று **மெக்கா என்று கூறப்படும் மகேசுவரன் பட்டினத்திலும்**, அதன் அருகிலுள்ள **எமன் என்னும் நகரத்திலும்**, **முருகு என்ற மலைத்தொடர்**களின் மீதும் நகராக்கள் முழக்கி தொழுகை முறையில் பூசைகளைத் துவக்கிய பதினெண்சித்தர்கள் முறை ஒன்றுதான் இன்றுவரை அந்நாட்டு மக்களை குபேர செல்வங்களை உடையவர்களாக ஆக்கி இருக்கிறது. இருப்பினும் அங்கு ஐந்து முறைதான் தொழுகை முறையைப் படைத்தார்கள் பதினெண் சித்தர்கள். ஏனெனில், இறை அணுக்கள் ஊற்றெடுக்கும் இளமுறியாக் கண்டத்திலிருந்து இந்த நாடு தொலைவில் இருக்கிறது. இன்றைய தமிழகம், தென்னிந்தியா, இலங்கை, தாய்லாந்து, சப்பான், அந்தமான், நிகோபார், பாலித் தீவுகள், கன்னித் தீவுகள், இலட்சத் தீவுகள், .... முதலியவை கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டத்தின் சிதைந்த பகுதிகளே என்பதால்தான்; இந்தப் பகுதிகளில் எல்லாம் ஆறுகாலத் தொழுகை முறை [*ஆறு காலப் பூசை*] நடைமுறையில் இருந்து வருகிறது. [***மதங்கள் சித்தர் நெறிக்குக் கிடைத்த வெற்றியாகும்***] தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் குருவழி வாரிசுகளாகப் பயிற்சி பெற்று அருளாளர்களாகி எல்லா வழிபாட்டு நிலையங்களிலும் தொழுகை முறை வழிபாட்டை முன்னின்று நடத்தக் கூடிய செயல்திட்டம் உருவாகிச் செயலில் இருக்கிறது. இதனை இந்துக்கள் புரிந்து, விரும்பி, நம்பி ஏற்றுக் கொண்டால்தான் இந்துமத மறுமலர்ச்சியை விரைந்தும், விரிந்தும் செய்ய முடியும்.

குருபாரம்பரியம் கூறும் கோயில் ஆகம விதிப்படி, “.... கோபுரத்தைக் கண்களால் காணவும் வலச் செவியில் [வலதுபுறக் காது] மணியோசையின் இனிமை ஒலி நுழையவும்; இடச் செவியில் நகராவின் அருட்சினைக் கனி ஒலி நுழையவும் மெய் மயிர்சிலிர்த்து, வெய்துயிர்த்து ஆனந்தக் கண்ணீர் உகுத்து ஆண்டவர்கள் அனைவரையும் வழிபட்டு மானுடம் உய்யவே இந்துமதத்தைப் பதினெண்சித்தர்கள் பூசையின் துணை கொண்டு; சரநூல், ஊசிமுறி, விரிச்சி, முத்துக்குறி, புள்நிமித்திகம், உடுக்கை, மருள், அருள், குரவை, வெறியாட்டு.... முதலியவைகளின் மூலம் கிடைக்கும் தத்துவங்களை வழியாக ஏற்று வழிபாட்டு நிலையங்களை அமைக்க வேண்டும்” - கருவூர்த் தேவர் வாசகம் [கி.பி. 1002 முதல் கி.பி. 1182 முடிய]. இவ்வாசகம்

திருமாளிகைத் தேவர் [கி.பி.1041 முதல் கி.பி.1136 முடிய] திருப்பூவணத்தில் [கும்பகோணம் அருகில்] கூழாங்கற்களைக் கூழாகக் காய்ச்சி மிகப்பெரிய சிவலிங்கம் வார்த்து திருக்கோயில் கட்டியபோது அவரது தந்தை கருவூர்த் தேவர் அருளியது.

"நகராக்களின் முழக்கமே இந்துமத எழுச்சி"

"தொழுகை முறையின் வளர்ச்சியே இந்துமதச் செழுச்சி"

"இந்துமதச் செழுச்சி இந்திய நாட்டின் வளவளர்ச்சி"

"இந்தியரின் வளவளர்ச்சியே இம்மண்ணுலக உயர்ச்சி"

"இந்து மதத்தாலேயே உலக ஒற்றுமையும் அமைதியும் உருவாகும்"

"இந்துமதத்தாலேயே உலகச் சமத்துவமும் சகோதரத் தத்துவமும் உண்டாகும்"

"இந்துமதத்தாலேயே உலகப் பொதுவுடமைக் கூட்டுறவு அரசு அமையும்"

"இந்துமதமே எல்லா எண்ணங்களையும், உணர்வுகளையும் தீர்த்து வைக்கிறது"

"இந்துமதமே இறவாமைக்கும் பிறவாமைக்கும் வழிகாட்டுகிறது"

**அருளியவர்:-** அன்பு
குருமகாசன்னிதானம்,
ஞாலகுரு சித்தர் கருவூரர்

ஏட்டில் வரைந்தவர்:-
சித்தர் மகன், சித்தரடியார் சோ.இரவீந்திரன்

# அரசினர்க்கு அருளுலக அறிவிப்பு

அருள்மிகு சித்தரடியார்,
காசிதீர்த்த தவத்திரு சாது அடிகளார்,
பதினெண்சித்தர் பாலாற்று அருட்கோட்டச் சோமகோடிப் பீடாதிபதி
தேவி செறுவாச்சியூர் மருதக்காளி சன்னிதானம்
கீரம்பூர் எட்டுக்கைக் காளி சன்னிதானம்
அரியவாள், தேவாச்சாரியார்
காசி தீர்த்தம் கிராமம்,
ஜாபராபேட்டை (அஞ்சல்), வேலூர்-632006

1) அருளாட்சிக்குரிய அமைப்புப் பணிகளில் ஈடுபட்டு உள்ளவர்களில் அடியேனும் ஒருவன் என்ற முறையில் இன்றுள்ள அரசினருக்கு அருளுலகம் பற்றிய முயற்சி நிலைகளை விளக்க ஆசைப்படுகிறேன்.

2) கி.பி.785 முதல் கி.பி.1279 முடிய தமிழகத்தில் நிலவிய அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை உருவாக்கியவரும், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவரும், பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதியுமான குருமகா சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் இலக்கியங்களாக எழுதி முடித்த **"வாசகங்கள்"**, எழுதாக் கிளவிகளாக வழங்கிச் சென்றுள்ள **"வாக்குகள்"** முதலிய அனைத்திலும் மிகமிகத் தெளிவாக இந்துமத மூலவர்களான தமிழர்களே உலகம் முழுதும் அருளாட்சி அமைப்பர் என்ற செய்தியினையும் அதற்குரிய வழிமுறைகளையும் வழங்கிச் சென்றுள்ளார். அதன்படிதான் இன்றைய சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கியத் தொழில் நிலைகள் இருக்கின்றன. எனவே, யாம் தாயக நன்மை கருதியும், உலக நன்மை கருதியும் இந்த 'அரசினர்க்கு அருளுலக அறிவிப்பு' வழங்குகிறோம். புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக.

3) எமது குருதேவர் தமது பயிற்சிக்குரிய பதினெட்டாண்டுகளையும், முயற்சிக்குரிய

பதினெட்டாண்டுகளையும் கடந்து அரசயோகியாக, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானமாக, இந்துமதத் தந்தையாக, ஞானாச்சாரியாராக, இராசி வட்ட நிறைவுடையாராக, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாக, குருமகா சன்னிதானமாக செயல்பட்டு வரும் ஞாலகுரு சித்தர் கருவூரார் ஆவார். இவர், மிகத் தெளிவாக இந்தியத் துணைக்கண்டத்தில் மொழிகளும், மொழிவழி இனங்களும் தனித்தன்மை இழந்து, நலிந்து, சிதைந்து, சீர்குலைந்து வருங்காலமே இருண்டு போகக்கூடிய இந்திமொழி ஆதிக்கமே அனைத்துத் துறைகளிலுமே நிகழ்ந்து வருவதைக் கண்டித்து; மொழிச் சமத்துவமும், இனச் சமத்துவமும், அதிகாரப் பொதுவுடைமையும் விரைவில் உருவாக்கப் பட வேண்டும் என்று தொடர்ந்து அறிவித்தும் அரசினர், அரசியல்வாதிகள், சமய சமுதாய கலை இலக்கியவாதிகள் யாருமே புரிந்து திருந்தவில்லை.

4) இந்துமதம்தான் இந்தியாவின் அரசியல் மதமாக வேண்டும். இந்தியாவில் உள்ள அனைத்து மொழிகளும் அரசியல் மொழிகளாக அறிவிக்கப்பட்டு சமமான உரிமைகளும், பெருமைகளும், வசதிவாய்ப்புகளும் வழங்கப்பட்டு அனைத்து மொழிகளும் செழித்து வளர ஏற்பாடு செய்யப்பட்டேயாக வேண்டும். அனைத்து மாநிலத்தவர்களும் இந்தியாவின் தலைமைப் பதவிகளில் மாநிலவாரியாக ஒருவர் பின் ஒருவராக அமரக்கூடிய வாய்ப்புகள் உருவாக்கப் பட்டேயாக வேண்டும். இவை நிகழாவிட்டால் இந்தியத் துணைக்கண்டம் மொழி வழி தன்னாட்சி பெற்ற நாடுகளாக துண்டு துண்டாக பிரிந்து சிதைய நேரிடும். எனவே, அனைத்து மொழி வழி இனங்களுக்கும், மொழிகளுக்கும் உரிமையும், பெருமையும், பாதுகாப்பும், சம வளவளர்ச்சி வாய்ப்பும் உடைய ஓர் அரிய புதிய அரசியல் நிர்ணய சட்டத்தின் மூலம், **'இந்திய ஐக்கிய மாநில கூட்டாட்சி அரசு'** (The United States of India) உருவாக்கப் பட்டேயாக வேண்டும். இன்றைய நிலையில் வேண்டுமானால், மொழிப்பற்றுக் குறைவும், இன ஒற்றுமைக் குறைவும், மொழித் துரோகிகளின் மிகுதியும், இன விரோத கைக்கூலிகள் மிகுதியும், பேராசை பிடித்த தன்னல வெறியர்கள் மிகுதியும் இருக்கலாம். ஆனால், ஒரே ஒரு மொழி ஆட்சி மொழியாக இருப்பதால், இம்மொழியும், இம்மொழிக்கு உரியவர்கள் மட்டுமே சர்வாதிகாரிகளாக வளர்ந்து ஏதேச்சாதிகாரங்கள் செய்து இந்திய மொழி வழி இனங்களிடையே மிகுந்த ஏமாற்றங்களையும், ஏற்றத் தாழ்வுகளையும், புறக்கணிப்புகளையும், பற்றுக் குறைகளையும் வளர்த்து வருகின்றார்கள். இவை, மிகமிகக் கடுமையான, கொடுமையான, அச்சமிகு அநாகரீக கிளர்ச்சிகளை புரட்சிகளாக வளர்க்க நேரிட்டு விடும். இவை பற்றி தமிழகத்தில் அருட்பேரரசு அமைத்திட்ட சித்தர்களின் வாக்குகளையும், வாக்கியங்களையும், வாசகங்களையும் அடிப்படையாகக் கொண்டு எமது குருதேவர் விடுத்த அனைத்துவகையான எச்சரிக்கை அறிவுரைகளையும் இன்றைய ஆட்சியினர் புறக்கணிப்பு செய்து விட்டனர். அதனால்தான், நாட்டில் வறுமைநிலை, நோய்நிலை, பிச்சைக்கார நிலை, வேலையில்லாத் திண்டாட்டநிலை, கள்ளச்சந்தை நிலை, பகற்கொள்ளை நிலை, ஊழல் நிலை, நிர்வாகச் சீரழிவு நிலை... முதலிய பல்வேறு குறைகள் தொடர்ந்து இருந்து வருகின்றன. இவற்றால் அருளுலகிலும், பொருளுலகிலும் முறையே இருளும், இன்னலும் நிகழ்ந்து விட்டன. எனவேதான், எமது குருதேவர் அருளுலக இருளகற்றும் பணியின் மூலம் பொருளுலக இன்னல்கள் அனைத்தையும் நீக்கும் மாபெரும் பணியில் ஈடுபட்டே; **'அருளாட்சி அறிவிப்பு அறிக்கை'**, **'அருளாட்சி அமைப்புப் பணித் திட்ட விளக்கம்'**, **'அருளுலக இருளகற்றும் பணி அழைப்புத் திருவோலை'** ...

முதலியனவற்றை வழங்கித் தாம் உருவாக்கிய பல நூறாயிரக்கணக்கான அருளாளர்களையும் அருட்பணி விரிவாக்கத் திட்டத்தைச் செயலாக்கப் பணித்துள்ளார். இதன்படியே, யாமும் வட ஆற்காடு மாவட்ட, வேலூர் அருகில் உள்ள காசிதீர்த்தம் கிராமத்தில் ஆசிரமம் வைத்து மக்களுக்கு அருளை அநுபவப் பொருளாக வழங்கி அருட்படைத் தளபதிகளில் ஒருவராக இயங்கி வருகிறோம்.

5) இன்றைய நிலையில் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியின் இழப்பும், தமிழக முதல்வர் எம்.சி.இராமச்சந்திரன் உடல்நலப் பாதிப்பினால் ஏற்பட்ட இழப்பும் உடனடியாக சரி செய்யப்பட வேண்டும் என்ற பேரார்வத்தினாலேதான்; திருவுள ஒப்புதலும், குருவுளச் சம்மதமும் பெற்று இந்த நெடிய அறிக்கையினை வழங்குகிறோம் யாம்.

6) எமது குருதேவர் இந்தியத் துணைக்கண்டத்திலேயே அருட்பேரரசாகச் செயல்பட்டது தமிழினப் பேரரசுகள்தான் என்ற பேருண்மைகளை விளக்கி தமிழக அரசியல்வாதிகளுக்கு தமிழின் அடிப்படையில் செய்யவேண்டிய அருளுலக, பொருளுலக மறுமலர்ச்சிப் பணிகளை அறிவித்து வந்துள்ளார். ஆனால், முறையான தமிழ்ப் பாரம்பரியமோ, நிறைந்த தமிழ் உணர்வோ, உண்மையான தமிழ்ப்பற்றுடைய புலமையோ உடையவர் யாரும் இன்றுவரை தமிழகத்தை ஆளவே இல்லை, இல்லை, இல்லை, இல்லவே இல்லை. எனவேதான், எல்லா நிலைகளிலும், வகைகளிலும் தமிழினம் ஒற்றுமையின்றி, சிதைந்து, சீரழிந்து, அடிமைப்பட்டு, நலிந்து, மெலிந்து கிடக்கிறது. இதற்கு ஒரு விடிவு வந்தேயாக வேண்டும்.

7) அண்மையில் தஞ்சைப் பெரியகோயிலில் முதலாம் இராசராச சோழனின் ஆயிரம் ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்ட போது எமது குருதேவர் 'இந்தியக் குடியரசுத் தலைவர்' முதல், தமிழக அமைச்சர்கள் அரசியல்வாதிகள், சமுதாயவாதிகள், சமயவாதிகள், கலை இலக்கியவாதிகள் முதலிய அனைவருக்கும் இவ்விழாவை எப்படிக் கொண்டாட வேண்டும் என்றும், எப்படி எப்படி கொண்டாடக் கூடாது என்றும் தெளிவாக அறிவித்தார். இவர் தஞ்சைப் பெரியகோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் நேரடி வாரிசாகப் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாக அருட்பேரரசின் அரியணையில் அமர்ந்திருக்கும் தமது ஆணை வழிதான் சிலைகளுக்கும், கோயில் மரபுகளுக்கும், ஒழுங்குகளுக்கும், பூசா விதிகளுக்கும், பிற நடைமுறைகளுக்கும் புதிய வடிவமைப்புத் தரவேண்டும், இல்லையென்றால் நாடு தழுவிய தனிமனிதப் பாதிப்புகளும், ஒட்டுமொத்தமாக சமய சமுதாய அரசியல் பாதிப்புகளும் விளைந்திடும், விளைந்திடும், விளைந்திடும் ... என்று எச்சரிக்கை விடுத்தார். ஆனால், இந்திய விடுதலைப் போராட்டத்தின் இடைப்பட்ட காலத்தில் இருந்து போலிமனமும், கூலிமனமும், காலிமனமும், கோமாளி அறிவும், கோணல் அறிவும், தன்னலவெறி யுணர்வும், புகழ் வெறியுணர்வும், தான்தோன்றி உணர்வும் ... மிகுந்தவர்களே வழி நடத்தும் நிலையினராக இருந்து வருகின்றார்கள். இவர்களின் தொடர் வாரிசுகளாக இந்திய விடுதலைக்குப் பிறகும் தன்னல வெறிப் போக்கும், சமுதாய நல துரோகப் போக்கும் அதிகமாக உடையவர்களின் கையிலேயே இத் திருநாடு இருந்து வந்திருக்கின்றது. எனவேதான், அருளுலக அறிவிப்புகளும், எச்சரிக்கைகளும், பரிந்துரைகளும், செயல்விளக்கங்களும் இத் திருநாட்டைக் காப்பாற்றாமலேயே போய்விட்டது.

8) தஞ்சைப் பெரியகோயிலில் உள்ள முதலாம் இராசராசனின் சிலையின் மர்மங்களின் அடிப்படையில் அதற்கு விழா எடுப்பது, திருமுழுக்காட்டுவது, மணிமுடி சூட்டுவது ... முதலியவை பற்றி எமது குருதேவர் விடுத்த எச்சரிக்கையை ஏற்காத காரணத்தினால்தான் இந்தியப் பிரதமருக்கும், தமிழக முதல்வருக்கும்

பாதிப்புகள் விளைந்தன. இனியாவது அருட்பேரரசு அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள எங்களைக் கேட்டு இன்றைய அரசினரும் பிற துறையினரும் ஈடுபட்டால் நல்லது, நல்லது, நல்லது.

9) உடல்நலப் பாதிப்புற்ற தமிழக முதல்வர் எமது காசி தீர்த்த ஆசிரமத்தில் வந்து தங்கி குறிப்பிட்ட காலம் அனைத்து விதமான அருளுலகப் பரிகாரங்களைச் செய்து கொண்டால்தான் முழுமையான நலம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம் யாம். இனியாவது எங்களது குருதேவரையும், எங்களது இந்து மறுமலர்ச்சி இயக்கத்தையும், இதனுடைய பத்துக் கிளை அமைப்புக்களையும் புரிந்து, விரும்பி ஏற்று நன்மை அடையும்படி கேட்டுக் கொள்கிறோம் யாம்.

10) கி.பி. 1772இல் சித்தர் கருவூரர் வழிவந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமிப் பிள்ளை அவர்கள் உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை உருவாக்கவும்; உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைக்கவும் பதினெண்சித்தர்களின் சித்தர் நெறியெனும் உலக முதல் தத்துவ அடிப்படையில் அருட்பேரரசு அமையவும் ... உரிய, அரிய, பெரிய, சீரிய, நேரிய, கூரிய முயற்சிகளை செய்வதற்காக தோற்றுவிக்கப் பட்டதே 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்'. இது உலகம் தழுவி வளத்தோடும், வலிவோடும், பொலிவோடும் அனைத்து மதத்தவர்களிடையேயும் வளர்ச்சி பெற்றிருக்கின்ற ஒரு பண்பாட்டுக் கழகமேயாகும். இதனுடைய தலைமைப் பொறுப்பினை ஏற்றிட்ட மூன்றாவது தலைவரான எமது குருதேவர், தமது கடலோடி காடோடி நாடோடி வாழ்க்கையின் சாதனைகளால் பல நூறாயிரக் கணக்கான அருளாளர்களை தயாரித்து அன்பு வழியில், அறவழியில், அமைதி வழியில், சமாதான வழியில், மறுமலர்ச்சிப் பணியினை ஆற்றி வருகின்றார். அவருடன் அருளுலக ஆர்வலர்கள் அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும் என்ற வேண்டுகோள் திருமுகமாகவே இந்த அறிவிப்பினை வழங்குகிறோம் யாம்.

**மொழி உரிமைகள் காக்கப் படட்டும்!**
**இன ஒற்றுமைகள் வளர்க்கப் படட்டும்!**
**தன்மான உணர்வு தழைக்கட்டும்!**
**தன்னம்பிக்கை உணர்வு செழிக்கட்டும்!**
**பண்பாட்டுப் பாரம்பரியக் கூறுபாடுகள் வலிமை பெறட்டும்!**
**தனிமனித வாழ்வு கனிவு பெறட்டும்!**
**குடும்ப வாழ்வு இனிமை பெறட்டும்!**
**சமுதாய வாழ்வு உண்மையுறட்டும்!**
**அரசியல் வாழ்வு நன்மை நல்கட்டும்!**

**தென்னாடுடைய சிவனே போற்றி!**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!**
**ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்**

***சித்தரடியார் காசிதீர்த்தம் சாது அடிகளார் பதினெண்சித்தர் பாலாற்று அருட்கோட்டச் சோமகோடி பீடாதிபதி***

**//உண்மை நகல்//**

**இதன் மூலம்: சித்தரடியான் இரா.செ.வேங்கட்டரமணன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.**



சென்னை, காரணோடையில் குருதேவர் அமைத்த கோயிலில் மட்டுமே உள்ள அம்மையப்பர் வடிவம்.